1979 மார்ச் 5]

அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்து அறிவிக்கப்படும். மேலும் வெட்டுத் தீர்மானங்களை ஒட்டுமொத்தமாகப் பெறுவதைத் தவிர்ப்பதற்காக, உறுப்பினர்கள் இன்றையிலிருந்தே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்கலாம்.

வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான படிவங்களை சட்ட மன்றப் பேரவை மசோதா பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே ஜட்ஜுகள் எல்லாம் வழக்குகளை நடத்த முடியாத அளவிலே வழக்கறிஞர்கள் எல்லாம் ஊர்வலத்தை நடத்தியிருக்கிறார்கள்......................

(3) தகவல் கோரல்—அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எடுக்க இருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களைப்பற்றிச் சொல்லிவிட்டால் இந்தப் பிரச்னை எழாது. மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வருகின்றன. அதுவன்றி ஏதாவது இருந்தால் எழுப்புங்கள். நான் எடுத்துக் கொள்ளவிருப்பதை அறிவிக்கிறேன். அதில் நீங்கள் சொல்ல விரும்புவது இல்லையென்றால் பிறகு எடுத்துச் சொல்லுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி அல்ல நான் சொல்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருந்தாலும் பிறகு எழுப்புங்கள் என்றுதான் சொல்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : என்னுடைய பாயிண்ட் வேறே. 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக, மதுரை திருப்பரங்குன்றம்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் 42-ஆவது விதியில் இருப்பதைச் சொல்லிவிடுகிறேன். நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் போகிறேன். அதுவன்றி வேறு ஏதாவது இருந்தால் எழுப்புங்கள். முதலில் சிம்கோ பேக்டரியைப் பற்றி எடுக்கிறேன். அடுத்து...............

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொண்டால் எது எது ஒத்திவைப்புத் தீர்மானத்தில் வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அதற்குப்பிறகு மற்றவைகளை அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொல்கிறேன். மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு இன்றைக்கு அனுமதி அளித்திருக்கிறேன். அதற்கு அப்பாற்பட்டு வேறு பிரச்னைகள் இருந்தால் எழுப்பலாம். அந்த மூன்று எது எது என்று சொல்லி விடுகிறேன். சிம்கோ பிரச்னை பற்றி முதலில் வருகிறது. மதுரை திருப்பரங்குன்றம் காவல் நிலையம் பற்றி இரண்டாவதாக வருகிறது. மூன்றாவதாக தஞ்சை பாலையூர் காவல் நிலைய சரகம் பற்றி வருகிறது. இவைகள் அன்னியில் வேறு ஏதாவது இருந் தால் சொல்லுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19 ஆம் நாளில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். இன்றுவரையில் அது எடுக்கப்படவில்லை அதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி அறையிலே வந்து கேட்டால் என்ன நிலையில் இருக்கிறது என்று சொல்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனையைப்பற்றி இந்த அவையிலே கொண்டு வர விரும்புகிறேன். இந்தத் ''தமிழரசு'' என்ற பத்திரிகை தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படும் பத்திரிகை. இந்தப் பத்திரிகையை நம்முடைய அரசாங்கம் வெளியிடுகிறது. 1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23 ஆம் நாள் நடந்த இந்தி எதிர்ப்பு சம்மந்தப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பட்டியல் என்று போட்டு வலது கம்யூனிஸ்ட் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. மாணிக்கம் கலந்து கொண்டார் என்று போட்டிருக்கிறது. வலது கம்யூனிஸ்ட் கட்சி என்று இருக்கிறதா? இப்படி. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அவர்கள் இந்த நேரத்தை வீணாக்க வேண்டாம். உங்களுடைய கட்சி உறுப் பினர் இன்றைக்குப் பொது விவாதத்தில் பேசுகிறார்.

திரு. மு. அம்பிகாபதி : அதுவல்ல பிரச்சனை, அரசாங்கம் வெளியிடுகின்ற புத்தகத்திலே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மன்னிக்க வேண்டும். இன்றைக்கு உங்கள் கட்சியின் சார்பிலே பொது விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, அப்பொழுது பேசலாம்.

திரு. மு. அம்பிகாபதி : விவாதத்தில் பேச மாட்டோம்.

1979 மார்ச் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியே எழுத்து மூலமாகக் கொடுத்தால் என்ன என்று கவனித்து, நடவடிக்கை எடுக்கலாம். இப்பொழுது இந்தப் பிரச்னையை எழுப்ப வேண்டாம்.

திரு என். பழனிவேல் : பேரவைத் தலைரவரவர்களே, சென்ற 20 ஆம் தேதி நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்து அது அனுமதிக்கப்பட்டுள்ளது. பழனி தேவஸ்தான உண்டியலை எண்ணுவதில் இரண்டுதரப்பு அதிகாரிகளுக்கிடையில் தகராறு ஏற்பட்டு இன்றையதினம் உண்டியல் எண்ணுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்து அது அனுமதிக்கப்பட்டு இன்றோடு ஒரு வாரம் ஆகிறது. இன்று வரையில் அதற்குப் பதில் இல்லை, அதை எப்பொழுது எடுத்துக்கொள்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் நீங்கள் விவரமாகச் சொல்லிவிட்டீர்கள். இதைப்பற்றி அறையிலே வந்து கேளுங்கள். பதில் சொல்கிறேன். அடுத்து, சௌந்திர ராசன்...............

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, நானும், சட்டமன்ற உறுப்பினர் இராமலிங்கமும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் கூப்பிட்டது சௌந்தரராசனை.

திரு கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவரவர்களே, நான், திருச்சியிலே நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி இங்கே 41-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். திருச்சி நகரத்தில் தொழிலாளர்கள் என்ற பெயரிலே அடியாட்கள் வந்து அங்கேயுள்ள பொதுமக்களைத் தாக்கி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி வருகிறது.

திரு கே. சௌந்திரராசன் : நான் சொல்வது சிம்கோ மீட்டர் விவகாரமல்ல. அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே சொல்கிறேன். தொழிலாளர்கள் என்ற பெயரில் நிர்வாகத்தைச் சேர்ந்த ஆட்கள் பொது மக்களைத் தாக்கியிருகிறார்கள். இதுதான் விவகாரம். நான் சிம்கோ மீட்டர் விவகாரத்திற்கு உள்ளே போகவில்லை. பொது மக்களைத் தாக்கும் நிலைமை திருச்சி நகரத்திலே உருவாகி, பெரும் பரபரப்பு ஏற்பட்டு, கடந்த சில மாதங்களாக அங்கே

நடந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குப் பல உறுப்பினர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

[முற்பகல் 10–10]

இன்றைய தினம் விபரீதமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை அரசாங்கத்திற்கும் சொல்லியிருக்கிறேன். அதனைப் பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன், அதை எடுத்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் போராட்டம் முடிவுற்றதுபற்றி இன்று பத்திரிகையிலே பார்த்தோம். அதைப் பற்றி இந்த அவையிலே கல்வித் துறை அமைச்சர் அவர்கள், லேட்டஸ்ட் பொசிஷன் என்ன என்பதைப்பற்றி ஒரு அறிக்கை கொடுத்தால் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மையிலேயே நான் கல்வித் துறை அமைச்சரைத்தான் பார்த்தேன். இல்லை. அவர்கள் வருகை தந்திருந்தால் அங்கே அறிக்கை கொடுத்திருந்தால் அதை இங்கேயும் கொடுக்கலாம் என்று சொல்லியிருப்பேன், வரவில்லை. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மதுரையிலே மத்திய கூட்டுறவு வங்கியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத்தான் தந்தார்கள். இப்பொதுதான் தந்தார்கள், அதைப்பற்றி இங்கே பேசக்கூடாது. தயவுசெய்து அமருங்கள்.

திரு ப. சந்திரன் : தலைவர் அவர்களே * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுக்கப்பட்டது குறித்து இங்கே பேசக் கூடாது. அவர் பேசியது அத்தனையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு ரா. மார்க்கபந்து : தவறான தகவலைக் கொடுக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்லக் கூடாது. அமருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ரா. மார்க்கபந்து : நான் சொல்வது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி சொல்லக் கூடாது. அமருங்கள். நான் சொல்கிறேன். தாங்கள் எழுந்து பேசிக்கொண்டே இருந்தால் எப்படி ? உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். எந்த காரணத்தைக் காட்டி அதை நிராகரித்து இருந்தாலும் அதைப் பற்றி இங்கே குறுக்கிட்டுக் கேள்வி கேட்கக் கூடாது, என்னுடைய அறையிலே வந்து அதை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்லலாம். தவறான தகவலைத் தருகிறோம் என்று சொல்வது தவறான விவகாரம். அப்படிச் சொல்லக்கூடாது. அங்கே வந்து சொல்லி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லலாம். தவறான தகவல் தந்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை, அமருங்கள்.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள், இப்படியே 230 உறுப்பினர்களும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டுயிருந்தால் எப்படி முடிக்க முடியும்? கொடுத்தே ஆக வேண்டுமென்று சொல்ல முடியாது. சொல்லுங்கள். உறுப்பினர்கள் தங்கள் கடமையை நினைத்துப் பார்க்கவேண்டும்.

திரு. துரை முத்துசாமி : திரு. மார்க்கபந்து அவர்கள் பேரவைத் தலைவர் தவறான தகவலைக் கொடுத்தார் என்று சொன்னார்கள், அவர் பேசியதும் அதைத் தொடர்ந்து தாங்கள் பேசியதும் இருக்கிறது. அது உரிமை மீறல் ஆகாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் நாள் அன்று சிம்கோ பேக்டரி பகுதியில் குண்டர்கள் பொதுமக்களைத் தாக்கியது குறித்தும், அது சம்பந்தமாக போலீஸ் நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்தும், திருச்சி நகரப் பொதுமக்கள் சிம்கோ தொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று திரு. ரா. உமாநாத், திரு. பி. சொரணம், திரு. கு. ரமணி. திரு. ஒ. எஸ். வேலுசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக முதலில் திரு. உமாநாத் அவர்களை விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.